தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புகு திரு. ப. குழந்தைவேலு: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

1981–82 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை மதிப்பீடுகளை இந்த அவையில் வைக்க முன் வருகிறேன். இந்தத் துணை மதிப்பீடுகளில் உள்ள மொத்தத் தொகை ரூபாய் 1,55.38 கோடியாகும். இதில் ரூபாய் 62.35 கோடி வருவாய்க் கணக்கில் உள்ளது. இதில் ரூபாய் 1.48 இலட்சம் சாட்டிய செலவுகள் குறித்ததாகும். ரூபாய் 13.03 கோடி மூலதன கடன் கணக்குகளில் உள்ளது. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்தச் சட்டத்தின்) (எண் 28/1981) அடிப்படையில் எதிர்பாராச் செலவு நிதிக்கு மாற்றுவதற்கு, ரூபாய் 80 கோடி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பல்வேறு மானியக் கோரிக்கைகளில் கேட்கப்பட்டுள்ள தொகைகளின் விவரமும் அவற்றிற்கான காரணங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. மன்ற உறுப்பினர்களின் தனி கவனத்திற்காக, சில குறிப்பிட்ட முக்கிய இனங்களின் விவரங்களை மட்டும் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. இம் மாநிலத்தில் நிலவிய வறட்சியின் விளைவுகளைப் போக்குவதற்காக மேற்கொளப்பட்ட பணிகளுக்கு ரூபாய் 48 90 கோடி செலவிடுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர் இந்த ஒப்புதலை அடிப்படையாகக் கொண்டு, மாநில அரசு ஏற்கெனவே வறட்சிப் பணிகளுக்கான செலவுக்கு அனுமதி வழங்கி உள்ளது. இதில் ரூபாய் 18.72 கோடி குடிநீர் வழங்கும் பணிகளுக்குரியதாகும்; ரூபாய் 26.03 கோடி வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்குரியதாகும். பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகக் குடியானவர்களுக்குத் தக்கவிக் கடன் வழங்கும் இனம் மத்திய அரசால் ஏற்பளிக்கப்படாவிட்டாலும், குடியானவர்களுக்கு அவ்வாறு கடன் வழங்கும்பொருட்டு, இந்த அரசு ரூபாய் 5 கோடி அனுமதித்துள்ளது.

3. கிராமப் பகுதிகளில் போதிய வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, இம் மாநிலத்தில் கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1980-81 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்காக ரூபாய் 4.45 கோடியும் நடப்பு நிதி ஆண்டில் (1981-82) மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்காக ரூபாய் 7.40 கோடியும் துணை மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசிடமிருந்து பெறும் தொகைக்கு நிகரான தொகை வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் மாநில அரசால் நடப்பாண்டில் செலவிடப்படும்.

4. 150 வளர்ச்சி வட்டாரங்களில் தன்னிறைவுத் திட்டம் செயற்படுத்தப்படுமென 1981-82 நிதி நிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டிருந்தேன். நடப்பாண்டில் 150 வளர்ச்சி வட்டாரங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக ரூபாய் 30 கோடியும் ஏனைய திட்டங்களுக்காக ரூபாய் 59 கோடியும் ஒதுக்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இத் திட்டங்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் பங்கினைச் செலுத்தும் பொருட்டு அவைகளுக்குக் கடன் அளிப்பதற்காக இந்தத் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை நல்ல முறையில் செயற்படுத்துவதற்கு அவசியமான தொழில்நுட்பப் பணியாளர் பதவிகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றிற்கு ரூபாய் 173.33 இலட்சம் செலவாகும்.

5. 1981-82 நிதி ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அவையில் வைக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள சில முக்கியமான செலவினங்களை மட்டுமே இப்போது எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகையை வழங்கி இத் திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன். வணக்கம்.

8. அரசினர் தீர்மானம்.

தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம்.

திரு. துரைமுருகன் : துணைத்தலைவரவர்களே, தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் குறித்து மதிப்பிற்குரிய நம்முடைய நிதியமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற இந்த வெள்ளை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். நாட்டிலே மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களின் விலைவாசி விஷம் போல ஏறியிருக்கிறது. வாங்குகின்ற சக்தியற்று ஏழை,